# சிறு விவசாயிகள் இயற்கை விவசாய அத்தாட்சி பெறுவதற்காக குழு அமைக்கும் முறைகள்

துரைராஜ் கே
இயற்கை விவசாய பயிற்சியாளர்

# ஐ சி எஸ் என்றால் என்ன?

- ஐ சி எஸ் என்றால் இன்டர்னல் கண்ட்ரோல் சிஸ்டம் அதாவது நமது கடமைகளை நாமே நிர்வாகம் செய்து கொள்வது.
- நமக்கு இயற்கை விவசாய அத்தாட்சி கொடுக்கும் நிறுவனம் ஆண்டுக்கு ஒரு முறை விவசாய குழுக்களை ஆய்வு செய்து பிறகு அத்தாட்சி வழங்குவார்கள்.
- வெளியில் இருந்து வரும் அத்தாட்சி நிறுவனம் ஒரு குழுவில் நூறு விவசாயி இருக்கிறார் என்றால் அத்தனை பேரையும் அவர்கள் நிலத்திற்குச் சென்று ஆய்வு செய்வது கடினம் ஆகையால் அந்த வேலையை ஒரு உள் குழுவுக்கு அவர்கள் அங்கீகாரம் அளிக்கிறார்கள் அந்த உள் குழுக்கு பெயர் தான் ஐசிஎஸ் என்று அழைக்கிறோம்.
- அத்தாட்சி வழங்கும் நிறுவனம் எந்தெந்த வேலையை செய்ய வேண்டுமோ அத்தனை வேலையை இந்த உள்குழு செய்து முடிக்கிறது இதனால் அத்தாட்சி பெறும் செலவு மிகவும் குறைவாக ஆகிறது.
- அத்தாட்சி கொடுக்கும் நிறுவனம் மாதிரிக்கு சில விவசாயிகளை மட்டும் ஆய்வு செய்வார்கள். ஆனால் ஐ சி எஸ் என்று சொல்லப்படும் உள்குழுவின் எல்லாவித வேலைகளையும் முழுவதாக ஆய்வு செய்து அதன் பிறகு அத்தாட்சி பத்திரங்கள் அளிப்பார்கள்.


ஐசிஎஸ் பற்றிய மற்றும் முழு விவரங்களையும் இனிவரும் ஸ்லைடுகள் மூலம் விவரமாக பார்க்கலாம்.

# சிறு விவசாயிகளில் குழு என்றால் என்ன?

ஒரே வகையாக விவசாயம் செய்யும் விவசாயிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து இயற்கை விவசாய அத்தாட்சி பெறுவதற்காக ஒரே அமைப்பின் கீழ் அங்கத்தினராவது தான் சிறு விவசாயிகள் குழு.

# ஐ சி எஸ் குழுவுக்கு இயற்கை விவசாய அத்தாட்சி வழங்குதல்

இந்தப் படத்தில் என்ன சொல்கிறார்கள் என்றால் அனைத்து விவசாயிகளையும் ஐசிஎஸ் என்னும் உள்மட்ட குழு மேற்பார்வையிடும் அதே சமயம் ஐசிஎஸ் என்னும் உட்குழுவை வெளியில் இருந்து அத்தாட்சி தரும் நிறுவனம் மேற்பார்வையிடுகிறது.



# சிறு விவசாய குழுக்களின் கொள்கைகள்

- ஒவ்வொரு விவசாயியும் இயற்கை விவசாயம் செய்வதற்கான நடைமுறைகளை மத்தியில் உள்ள ஒரு உள் அமைப்பு மேற்பார்வை இடுகிறது.
- இந்த குழுவிற்கான உள் அமைப்பு சட்ட திட்டங்கள் இருக்கும்.
- இயற்கை விவசாய அத்தாட்சி பத்திரம் ஒரு குழுவிற்கு ஒன்று என்ற அளவில் அளிக்கப்படும் ஒவ்வொரு விவசாயிக்கும் அத்தாட்சி பத்திரம் கிடைக்காது.



# சிறு விவசாயிகள் கூட்டமைப்புகளில் பல வகைகள் உண்டு



கூட்டுறவு சங்கங்களோ அல்லது
விவசாய உற்பத்தி சங்கங்களோ
இத்தகைய சிறு விவசாயிகள்
குழுக்களை அமைக்கலாம்



# எதற்காக இந்த ஐசிஎஸ் முறை?

- இது ஒரு நடைமுறைக்குகந்த குறைந்த செலவில் நடத்தப்படும் திட்டமாகும்.
- இயற்கை விவசாய பொருள்கள் உற்பத்தி பதனிடுதல் மற்றும் விற்பனையை திறம்பட கட்டுப்படுத்தவும் உத்தரவாதம் தரவும் அத்தாட்சி வழங்கும் நிறுவனத்திற்கு இந்த ஐசிஎஸ் முறை மிகவும் உபயோகமாக இருக்கும்.
- இதனால் குழுவில் உள்ள விவசாயிகளுக்கு நல்ல தகவல் தொடர்பும் ஒத்துழைப்பும் கிடைக்க வாய்ப்பு அமைகிறது.
- இதனால் தரக்கட்டுப்பாட்டை திறம்பட நடத்தலாம்.
- திறமையை வளர்த்துக் கொள்ள இந்தக் குழுவில் நடத்தப்படும் பயிற்சிகள் உதவியாக இருக்கும்.
- இயற்கை விவசாய பொருட்களுக்கு தகுந்த சந்தை வாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பாக அமைகிறது

# சிறு விவசாய குழுக்கள் அமைக்க தேவையான அம்சங்கள்

- நடைமுறைக்கு ஏற்ற வகையிலும் நம்பகத்தன்மையாக இருக்க வேண்டுமானால் ஒரு குழுவானது முடிந்தவரை அதிக அளவு அங்கத்தினர்கள் இருக்க வேண்டும்.

- ஒரே பகுதியை சேர்ந்தவர்களாகவும் ஒரே வகை பயிர்களை பயிரிடுபவர்களாகவும் இருக்கும் நபர்கள் ஒன்றாக சேர்வது சிறந்தது.

- சிறப்பாக எழுத்து மூலம் வரையறுக்கப்பட்ட திட்டங்கள் இருக்க வேண்டும்.

- பெரிய விவசாயிகள் குழுக்களில் இருக்கலாம். ஆனால் அவர்களின் நிலப்பரப்பு குழுவின் மொத்த நிலப்பரப்பில் 50% க்கு மேல் இருக்கக் கூடாது

- நான்கு எக்டர் அல்லது 10 ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளின் நிலத்தை வெளியில் இருந்து வரும் அத்தாட்சி நிறுவன ஆய்வாளர்கள் ஆய்வு செய்வார்.

- விவசாய குழுக்களுக்கு வேண்டிய உதவியாளர்களும் வசதிகளும் இருக்க வேண்டும்.

- வியாபாரத்திற்கு தேவையான பொருள்களை தங்கு தடையின்றி வழங்குவதற்கு ஒருவரோடு ஒருவர் ஒத்துழைப்பு தந்து பணியாற்ற வேண்டும்.

# ஐ சி எஸ் குழு அமைக்க குறைந்தபட்ச தேவைகள்

1. குழுவிற்கான சுய ஒழுங்கு முறை மற்றும் விரிவான கையேடு (INTERNAL STANDARD).
2. ஒப்பந்த முறையில் உறவுகளை ஏற்படுத்துதல்.
3. ஐ சி எஸ் பணியாளர்கள்.
4. ஐசிஎஸ் பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் உரிய பயிற்சி வழங்குதல்.
5. இயற்கை விவசாய குழு நிர்வாகமே பயிர்களை ஆய்வு செய்து தகுந்த பரிசீலனையும் செய்ய வேண்டும் (INTERNAL INSPECTION).
6. பண்ணையின்அன்றாட அலுவல்களை பண்ணை கையேட்டில் சரிவர எழுதி வைக்க வேண்டும்.

# சிறு விவசாய குழு என்றால் என்ன?



**சிறு விவசாய குழுவில் சிறு விவசாயி என்று சொல்லிக் கொள்ள வேண்டுமானால் கீழ் குறிப்பிட்டுள்ள நடைமுறையை பின்பற்ற வேண்டும்:**


- நான்கு எக்டர் அல்லது பத்து ஏக்கர் நிலம் அதிக அளவு இருக்கக்கூடியவர்கள்
- விவசாய நிலத்தை குடும்ப அங்கத்தினர்களே பராமரித்து கொள்வார்கள்
- குறைந்த தொழில்நுட்ப உற்பத்தி முறையை கையாளுபவராக இருப்பவர்
- விளைந்த விவசாய பொருள்களை சந்தைப்படுத்த குறைந்த அளவே திறன் படைத்தவராக இருப்பவர்
- விலை பொருள்களை பதப்படுத்தவும் சேமிக்கவும் குறைந்த அளவே திறன் படைத்தவர்கள்

# சான்றிதழ் பெறும் விவசாய குழுக்களுக்கு தேவையான இதர அம்சங்கள்

**குழுவிற்குள் அங்கத்தினர்களுக்கு தேவையான ஒற்றுமை**

- முடிந்தவரை வெகு அருகாமையில் இருப்பது
- பயிர் செய்தல் ஒரே மாதிரியாக இருப்பது
- நிலப்பரப்பின் அளவு ( < 4 HECTARE)

**குழுவில் உள்ள மொத்த அங்கத்தினருக்கும் பொதுவான சந்தை வாய்ப்பு**



# பெரு விவசாயிகளின் குழுக்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்



**1. சிறு விவசாயிகள் குழுவில் நிலம் அதிகம் வைத்திருக்கும் விவசாயிகளும் அத்தாட்சி பெறலாம்**

- ஒவ்வொரு விவசாயியின் நிலத்தையும் ஐசிஎஸ் மற்றும் அத்தாட்சி வழங்கும் நிறுவனமும் நேரடியாக ஆய்வு செய்வார்கள்.
- ஒவ்வொரு விவசாயியும் தேவையான பண்ணை பதிவேடு போன்ற அனைத்து ஆவணங்களையும் தாமே வைத்திருக்க வேண்டும்.
- பெரிய விவசாயிகளின் நிலப்பரப்பு குழுவில் உள்ள மொத்த நிலப்பரப்பில் 50 சதவீதத்திற்கு அதிகமாகாமல் இருக்க வேண்டும்.

**2. கீழ்க்கண்ட குழுக்கள் சிறு விவசாய குழுவில் அடங்காது**

- இவர்கள் பெரிய விவசாயியாக இருந்தாலும் இவர்களை இந்தக் குழு அமைப்பில் சேர்த்து அவர்களுக்கு அத்தாட்சி பத்திரம் வழங்கலாம்.
- இயற்கை விவசாய குறிப்புகளை தயாரிப்பதற்காகவும் மற்றும் ஒரு குழுவாக இணைந்து பொருள்களை சந்தைப்படுத்துவதற்கும் இந்த அமைப்பு உதவும்.
- விவசாயிகள் அனைவரும் ஒருங்கிணைந்து சந்தை படுத்த வேண்டும்.
- பெரிய விவசாயிகள் இருக்கும் இந்த குழுவில் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் ஒவ்வொரு அங்கத்தினர் வயலையும் வெளியில் இருந்து வரும் அத்தாட்சி வழங்கும் நிறுவனத்தை சேர்ந்த ஆய்வாளர் ஆய்வு செய்வார்.
- பெரிய விவசாயிகள் ஒவ்வொருவரும் தனித்தனியே அவர்களுடைய பயிர் குறிப்புகளை வைத்திருக்க வேண்டும்.



# விவசாய குழுவை பதிவு செய்தல் (ICS)

- குழுவை உருவாக்கியவுடன் சொசைட்டிகளின் பதிவாளரிடம் இந்தக் குழுவை பதிவு செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு PAN அட்டையை பெற வேண்டும்.
- குழு அதன் அங்கத்தினர்களை முடிவு செய்தவுடன் அந்தப் பெயர் பட்டியலை அத்தாட்சி வழங்கும் நிறுவனத்திடம் கொடுக்க வேண்டும். அவர்கள் கேட்கும் கட்டணத்தை செலுத்தி குழுவை பதிவு செய்து கொள்ள வேண்டும்.
- அத்தாட்சி வழங்கும் நிறுவனம் குழுவின் முழு விவரங்களையும், அதாவது குழுவின் அங்கத்தினர் பெயர் பட்டியல் PAN நம்பர் சங்கத்தின் பதிவு செய்த நகல் ஆகியவற்றை கொண்டு இந்த ஐசிஎஸ் குழுவை அப்பிடா உருவாக்கியுள்ள டிரேஸ் நெட் வலை பக்கத்தில் பதிவு செய்வார்கள்.
- இதன்பிறகு அத்தாட்சி வழங்கும் நிறுவனம் அந்த டிரேஸ் நெட் என்னும் வலைப்பகுதியை உபயோகிக்க தேவையான பாஸ்வேர்ட் மற்றும் குழுவின் பதிவு சான்று தருவார்கள்.
- அடுத்ததாக குழுவில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினரின் இயற்கை விவசாய நிலங்களின்அடையாள எண் அதாவது ஜிபிஎஸ் எடுத்து அங்கத்தினர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.
- இறுதியாக ஐ சி எஸ் குழுவின் பொறுப்பாளர்கள் அங்கத்தினர்களின் பெயர், கிராமத்தின் பெயர், நிலங்களின் விஸ்தீரணம், பயிர்களின் விவரம், அதாவது குறுகிய கால பயிரா அல்லது தோட்டப்பயிரா? என்ன வகை பயிர்கள்? நிலங்களின் ஜிபிஎஸ் எண், ஆகியவற்றை டிரேஸ் நெட்டில் பதிவிட வேண்டும்.

# ஐசிஎஸ் குவாலிட்டி மேனுவல் (தரத்தை உறுதி செய்யும் கையேடு)

❖விநியோகம் மற்றும் புதுப்பித்தல்*

❖ஐ சி எஸ் பற்றிய சிறு குறிப்பு மற்றும் அதன் நடவடிக்கைகள்*
- குழு அமைந்துள்ள இடத்தைப் பற்றிய விவரம்
- பயிர் செய்யும் முறைகள்
- பண்டங்களை வாங்குதல் பதப்படுத்துதல், விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்தல்

❖அபாய விளைவுகளை பற்றிய மேலாண்மை*
- அபாயம் விளையக்கூடிய சூழ்நிலைகள மதிப்பீடு செய்தல்
- அபாயம் விளைவிக்கக் கூடிய சூழ்நிலைகளை அறிந்து கொள்ளுதல் மற்றும் அதை மேலாண்மை செய்தல்

❖விவசாயக் குழு ஏற்படுத்திய உள்ள இயற்கை விவசாய விதிமுறைகள்

❖இயற்கை விவசாய நிலங்களில் கட்டுப்பாடுகளை கடைப்பிடித்தல் மற்றும் அங்கீகாரம் அளிக்கும் நடைமுறைகள்
- புதிய விவசாயிகளின் நுழைவு விண்ணப்பம் மற்றும் ஒப்பந்தத்தை பதிவு செய்தல்
- இயற்கை விவசாய விதிமுறைகளை குழுவின் பொறுப்பாளர் ஆய்வு செய்தல்
- விளைச்சலை மதிப்பீடு செய்தல்
- இயற்கை விவசாய முறைகளில் விதிமீறல் இருந்தால் அதற்கு உண்டான தண்டனை வழங்குதல் மற்றும் தவறுகளை திருத்திய பின் அங்கீகாரம் வழங்குதல்
- ஐ சி எஸ் குழுவின் ஆவணங்களை தயாரித்தல்

❖குழுவின் அமைப்பு மற்றும் ஐசிஎஸ் பணியாளர்கள்*

❖ஐசிஎஸ் குழுவின் பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல்*

❖விவசாய பண்டங்களை வாங்குதல் கையாளுதல் பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல். (இதற்குத் தேவையான முறைகளும் பணியாளர்களும்) *

# விநியோகம் மற்றும் புதுப்பித்தல்

- ஐ சி எஸ் கையேட்டில் உள்ள குறிப்புகளை அதற்கான பணியாளர்களிடம் அவர்களுக்கு தேவையான குறிப்புகளை கொடுக்க வேண்டும்.

- விவசாய அங்கத்தினர்கள் அனைவரும் தேவைப்பட்டால் ஐசிஎஸ் கையெட்டை பார்க்க அனுமதி தரலாம்.

- குழுவிற்கு சம்பந்தப்பட்ட இதர அமைப்புகளுக்கும் உரிமையாளர்களுக்கும் ஐ சி எஸ் கையேட்டை பார்க்க அனுமதி தரலாம்.

# ஐ சி எஸ் கையேட்டில் கூடுதல் விவரங்களை சேர்த்து மேம்படுத்துதல்:

- ஐசிஎஸ் கையேட்டில் தற்சமயம் நடைமுறையில் உள்ள விதிகளை சரிவர தெளிவுபடுத்த வேண்டும். ஆகவே கையேட்டை அடிக்கடி திருத்தி மேம்படுத்தி வைக்க வேண்டும்.

- திருத்தப்பட்ட பகுதிகளை சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு விநியோகிக்க வேண்டும்

# ஐ சி எஸ் பற்றிய சிறு குறிப்பு மற்றும் அதன் நடவடிக்கைகள்

- ஐ சி எஸ் கையேட்டில் விவசாய குழு அமைக்கப்பட்டுள்ள இடத்தை பற்றிய முழு விவரம் தரப்பட்டிருக்கும்.

- இயற்கை விவசாயம் செய்யும் அங்கத்தினர்களின் விவசாய அமைப்பு மற்றும் இயற்கை விவசாய முறைகளை பற்றியும் விவரம் அளிக்க வேண்டும்.

- அறுவடை முதல் பண்டங்கள் விற்பனைக்கு கைமாறும் தருணம் வரை ஒவ்வொரு செயலையும் விவரிக்க வேண்டும். அதேபோல் ஒவ்வொரு செயலுக்கும் பொறுப்பாளி யார் என்பதையும் விவரிக்க வேண்டும்.

# அபாய விளைவுகளை பற்றிய மேலாண்மை

- குழுவின் செயல்பாடுகளில் இயற்கை விவசாய பொருள்களுக்கு குந்தகம் ஏற்படும் அபாய விளைவுகளைப் பற்றி முன்கூட்டியே தெரிந்திருப்பதோடு குழுவின் செயல்பாட்டு முறைகளில் தகுந்த விதிமுறைகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

- ஆகவே இயற்கை விவசாய குழுவின் ஆய்வாளர் முன்னெச்சரிக்கையாக இயற்கை விவசாய நிலைக்கு பாதிப்பு உண்டாக்கும் காரணங்களை கண்டறிந்து இருக்க வேண்டும். அபாய விளைவுகளை குறைக்க உண்டான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

- அதேபோல் அத்தாட்சி வழங்கும் நிறுவனத்தின் ஆய்வாளரும் பாதிப்பு உண்டாக்கும் காரணங்களை முழுமையாக கண்டறிய வேண்டும். இதை அடிப்படையாகக் கொண்டு ஆபத்து விளைவிக்கும் காரணங்களை கண்டறியலாம் மற்றும் குழுவில் எத்தனை பேரை ஆய்வு செய்யலாம் என்ற எண்ணிக்கையும் முடிவு செய்யலாம்.



# அபாய விளைவுகளை பற்றிய மேலாண்மை

- இயற்கை விவசாயத்திற்கு பாதிப்பு விளைவிக்கும் காரணங்களை கண்டறியும் ஆய்வை அத்தாட்சி வழங்குவதற்கு முன்கூட்டியே செய்திருக்க வேண்டும் (*அதாவது முதல் ஆண்டிலேயே செய்ய வேண்டும் அல்லது அத்தாட்சி வழங்கும் நிபுணர் அறிவுரை வழங்கும் நேரத்தில் செய்ய வேண்டும்*)

- அறுவடை செய்த இயற்கை விவசாய பண்டங்கள் குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும் வரை எல்லா தருணங்களிலும் (அதாவது கொள்முதல் செய்தல் பதப்படுத்துதல் விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்தல்) பாதிப்பு ஏற்படுத்தும் காரணங்களுக்கான ஆய்வை செய்ய வேண்டும்.

- விவசாயக் குழு பாதிப்பு ஏற்படுத்தும் காரணங்களை அறிந்த பிறகு அதை குறைக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

- பாதிப்பு ஏற்படுத்தும் காரணங்களை தொடர்ந்து மேற்பார்வையிட்டு வரவேண்டும்.

# பாதிப்பு ஏற்படுத்தும் காரணங்களை இயற்கை விவசாய குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஆய்வு செய்ய வேண்டிய இடங்கள்

**அறுவடை நேரத்தில்**

**இயற்கை விவசாய பொருள்களை உலர்த்தும் இடம்**

**மூட்டை கட்டும் இடம் மற்றும் சேமிப்பு கிடங்குகள்**

விலைப் பொருள்களின் தரம் (முதிர்ச்சி)
எறும்பு போன்ற பூச்சிகளை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள்

பூச்சி மற்றும் இதர விலங்கினங்களில் இருந்து பாதிப்பு

ஊடு பயிர்களுக்காக உபயோகப்படுத்தப்பட்ட இடுபொருள்கள்

அறுவடைக்கு பயன்படுத்தப்படும் மாசு படிந்த சாக்குப்பை முதலியவை

இயற்கை விவசாய பண்டங்களுடன் இயற்கை விவசாயம் அல்லாத பண்டங்கள் கலந்து விடல் (உதாரணம் பப்பர் (buffer) பயிர்)

இயற்கை விவசாயம் அல்லாத பொருட்களுடன் கலப்படமாதல்

உலர்த்தும் இடங்களில் பூச்சித் தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள்

சாலைகள் மற்றும் இதர பண்ணைகளில் உலர்த்தும்போது ஏற்படும் கலப்படங்கள்

பூச்சி மருந்து பயன்படுத்தும் நிலங்களுக்கு அருகில் உலர்த்துவது. மலேரியா தடுப்புக்கு மருந்து தெளித்து இருந்தால் அந்த இடத்தில் உலர்த்துவது

உலர்த்தும் பண்டங்களுடன் கலக்கப்படும் சில பொருள்கள்


மாசுபடிந்த பைகளில் உணவுப் பண்டங்களை அடைத்தல்

கடந்த ஆண்டு மீதமுள்ள பண்டங்களோடு இந்த ஆண்டின் புதிய பண்டங்களை அடைத்தல். (முழுமையா அத்தாட்சி பெற்ற பண்டங்களோடு முதலாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு அத்தாட்சி பெற்ற பண்டங்களும் கலந்து விட வாய்ப்பு உண்டு)

அறுவடை செய்த பண்டங்களின் தரம் குறைதல்

சேமிப்பு செய்யும் கிடங்குகளில் செய்யப்படும் பூச்சி நோய் பாதுகாப்புகள்

# விவசாயக் குழு பணியாளர்களின் சேவை விவரங்கள் குறித்த பட்டியல் இருப்பது அவசியம் (மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது)



- மொத்த விவசாயக் குழுவின் கடமைகளுக்கு ஒருவர் பொறுப்பு ஏற்க வேண்டும். அவர் ஒவ்வொரு கடமைக்கும் ஒரு நபரை நியமித்து வழிநடத்த வேண்டும்.
- ஒவ்வொரு பணியாளரும் தேவையான படிப்பும் தகுதியும் உள்ளவராக இருக்க வேண்டும். அவருக்கு கொடுக்கப்பட்ட கடமையை அவர் நன்கு அறிந்திருக்க வேண்டும்
- குழுவில் பணியாற்றுபவர்கள் தங்கள் கடமைக்கு பங்கம் விளைவிக்கும் எந்த செயலிலும் ஈடுபட்டிருக்கக் கூடாது.

## இயற்கை விவசாய குழுவின் ஒருங்கிணைப்பாளர்.

- ✓குழுவின் உள்கட்டமைப்பு திட்டங்களை சரிவர பராமரிக்க வேண்டும்,
- ✓குழுவில் நியமிக்கப்பட்டுள்ள ஆய்வாளர் மூலம் இயற்கை விவசாய முறைகளை சரிவர ஆய்வு செய்ய வேண்டும்,
- ✓களப்பணியாளர்களையும் ஆய்வு செய்த நிலங்களை இயற்கை விவசாயத்திற்கு தகுதி என்று அங்கீகரிப்பவரையும் ஒன்றிணைத்து பணியாற்ற வேண்டும்,
- ✓அத்தாட்சி வழங்கும் நிறுவனத்தின் ஆய்வாளர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்,
- ✓இந்தக் குழுவிற்கு இவர் தான் தொடர்பாக இருப்பார்.

- ✓இவர் விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய விவரங்களை நன்கு அறிந்தவராக இருப்பார்.
- ✓குழுவின் நோக்கத்திற்கும் திட்டத்திற்கும் எந்த வகையிலும் பங்கம் விளைவிக்காத வகையில் பணியாற்றுவார்.
- ✓இயற்கை விவசாயத்திற்காக அத்தாட்சி வழங்கும் நிறுவனத்தோடு தொடர்பில் இருப்பார்.
- ✓இயற்கை விவசாய பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருப்பார்.
- ✓குழுவிற்காக நியமிக்கப்பட்டுள்ள ஆய்வாளரை கொண்டு அங்கத்தினர்களின் நூறு சதம் நிலங்களையும் சரிவர ஆய்வு செய்ய ஏற்பாடு செய்வார்.
- ✓குழு ஆய்வாளர்களுக்கு தகுந்த பயிற்சி அளிப்பார்.
- ✓ அனைத்து ஆய்வுகளின் ஆவணங்களை தயார் செய்வார்.
- ✓ குழுவின் ஆய்வற்குப் பிறகு அங்கத்தினருக்கு அத்தாட்சி வழங்கும் பரிந்துரையை செய்யும் குழுவுடன் ஒன்றிணைந்து பணியாற்றுவார்.
- ✓ குழுவின் ஆய்வாளர் எல்லா ஆய்வுகளும் செய்து முடித்த பின் அவற்றை நன்கு பரிசீலித்து ஒரு அறிக்கையை தயாரிப்பார்.
- ✓ அத்தாட்சி வழங்கும் நிறுவனத்தில் ஆய்வாளர் பரிசீலனை செய்யும்போது உடன் இருந்து பணியாற்றுவார்.

## ➢ போதுமான எண்ணிக்கை பயிற்சி பெற்ற குழுவின் ஆய்வாளர்கள் இருக்க வேண்டும்.

- ✓ குழுவின் இயற்கை விவசாய ஆய்வாளர்கள் திறமை உள்ளவராகவும் பாகுபாடு இன்றி ஆய்வு செய்பவராகவும் இருக்க வேண்டும்.
- ✓ ஒவ்வொரு ஆய்வாளரின் விபரங்கள் அடங்கிய பட்டியலும், ஒப்பந்த பத்திரமும் தொழிலில் பங்கம் ஏற்படாத அளவு பணி புரிவதற்கான உத்தரவாதமும் இருக்க வேண்டும்.

✓ குழுவின் ஒவ்வொரு 50 விவசாயிகளுக்கும் ஒரு ஆய்வாளர் என்ற விகிதத்தில் நியமிக்கப்பட வேண்டும்

✓ அவருக்கு விவசாயத்தைப் பற்றியும் சுற்றுச்சூழல் பற்றிய விவரங்களையும் நன்றாக தெரிந்திருக்க வேண்டும்

✓ ஆய்வு செய்யப்படும் விவசாயிகளோடு எந்தவித சொந்த தொடர்புகளும் இருக்கக் கூடாது

✓ குழுவின் உள்கட்ட நெறிமுறைகளை நன்கு தெரிந்திருக்க வேண்டும்

✓எந்த இயற்கை விவசாய திட்டத்தின் கீழ் ஆய்வு செய்கிறாரோ அந்த திட்டத்திற்கான விவசாய முறைகள் மற்றும் ஆய்வு செய்யவும் முறைகளின் முழு விபரங்களையும் தெரிந்திருக்க வேண்டும்.

✓ குழுவின் பொறுப்பாளரின் வழிகாட்டுதல் படி பதிவு செய்யப்பட்ட அங்கத்தினர்கள் அனைவரின் நிலங்களை ஆய்வு செய்ய வேண்டும்

✓ குழு பொறுப்பாளரிடம் ஆய்வு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்

- **இயற்கை விவசாயத்திற்கு அங்கீகாரம் அளிக்கும் குழுவில் இடம் பெற்றுள்ளவர் தகுந்த தகுதி படைத்திருக்க வேண்டும்.**
  - ✓ பாகுபாடு இல்லாமல் அங்கீகாரம் வழங்குவதற்கு தகுந்த தகுதி படைத்திருக்க வேண்டும்.
  - ✓ அங்கீகாரம் வழங்கும் குழுவில் உள்ள அனைவரும் தம்மை பற்றிய விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒப்பந்த பத்திரம் மற்றும் விவசாயிகளுடன் எந்த சொந்த தொடர்பும் இல்லை என்னும் உத்திரவாத பத்திரமும் குழுவிற்கு தர வேண்டும்.

- **களப்பணியாளர் மற்றும் விரிவாக்க பணியாளர்**
  - ✓ விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை பற்றிய பயிற்சியும் களப்பணிகளையும் செய்வார்
  - ✓ பயிர் உற்பத்தி மற்றும் பொருள்களின் தரம் ஆகியவை பற்றி தகுந்த ஆலோசனையும் உதவியும் வழங்குவார்
  - ✓ பண்ணை கையேடு போன்ற ஆவணங்களை சரிவர பூர்த்தி செய்து உதவி செய்வார்
  - ✓ இயற்கை விவசாயம் முறைகளை அங்கத்தினர் கடைபிடிப்பதில் தவறுகள் இருந்தால் குழுவின் தலைவருக்கு தகவல் தெரிவிப்பார்

## ➢ பாரபட்சத்தை தவிர்த்தல்

- ✓ பணியாளர்கள் சேவை செய்யும்போது உறவினர் அல்லது நண்பர்களுக்கு உள்ள உறவால் பணிக்கு பங்கம் ஏற்படக்கூடாது.
- ✓ குழு நியமித்துள்ள ஆய்வாளர்கள் தங்களின் உறவினர்கள் நண்பர்கள் மற்றும் வேண்டியவர்கள் நிலங்களை ஆய்வு செய்வதை தவிர்க்க வேண்டும்.
- ✓ எங்கெல்லாம் பாரபட்சம் காட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறதோ அந்த நேரத்தில் குழுவின் ஒருங்கிணைப்பாளருக்கு அந்த தகவலை எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.
- ✓ இந்த மாதிரி தருணத்தில் மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டும்

# பயிற்சி:

- **ஐ சி எஸ் குழுவில்  பணியாற்றும் அத்தனை பணியாளர்களுக்கும் தகுந்த பயிற்சி அளிக்க வேண்டும்**
- அந்த பயிற்சியில் இயற்கை விவசாயம் செய்யும் முறைகளையும் நிலங்களை ஆய்வு செய்யும் முறைகளையும் ஐ சி எஸ் குழுவின் விதிமுறைகளையும் சரிவர பயிற்சி அளிக்க வேண்டும்.
  - ✓ **ஐசிஎஸ் குழுவால் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு ஆய்வாளருக்கும் தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களால் ஆண்டுக்கு ஒருமுறையாவது பயிற்சி அளிக்க வேண்டும்.**
  - ✓ **பயிற்சி அளிக்கப்படும் நாட்கள் மற்றும் பயிற்சி அளிக்கப்பட்ட தலைப்பு ஆகியவற்றை பணியாளர்களின் கோப்பில் சேர்க்க வேண்டும்.**

# விவசாயிகளுக்கான பயிற்சி:

- விவசாயிகளுக்கு இயற்கை விவசாய முறைகளைப் பற்றிய பயிற்சி தருவது ஐசிஎஸ் ஒருங்கிணைப்பாளரின் பணி.
- குழுவின் இயற்கை விவசாய ஆலோசகர் ஆண்டுக்கு ஒரு முறையாவது அவருக்கு பயிற்சி அளிக்க வேண்டும். அதேபோல் முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி முகாம்களில் கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்க வேண்டும்.
- இந்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாம்களின் தலைப்பு நடத்தப்பட்ட தேதி கலந்து கொண்டவர்களின் பெயர்கள் ஆகிய விவரங்களை பதிவு செய்து வைக்க வேண்டும்.



# விளைபொருள்களை வாங்குதல், கையாளுதல், பதப்படுத்துதல், விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்தல்.

## கொள்முதல் விதிமுறைகள்:

இயற்கை விவசாய அங்கத்தினரிடமிருந்து கொள்முதல் செய்பவர் வாங்கும்போது இயற்கை சான்றிதழின் தன்மை சிறிதும் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக கீழ்க்கண்ட குறைந்தபட்ச நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்:

- ✓விவசாய பொருள்கள் கொள்முதல் செய்யப்படும் தருணத்தில் அதன் அங்கக சான்றிதழின் நிலையை சரி பார்க்க வேண்டும்.
- ✓கொள்முதலுக்கு வழங்கப்படும் பண்டங்களின் அளவோடு ஆய்வு செய்தபோது மதிப்பீடு செய்யப்பட்ட அளவை ஒப்பிட்டு சரிபார்க்க வேண்டும். இந்த அளவில் மாறுபாடு இருந்தால் அதை தனியாக வைத்துவிட்டு ஐ சி எஸ் குழுவின் ஒருங்கிணைப்பாளரிடம் இருந்து விளக்கம் கேட்டு சரி செய்ய வேண்டும்.
- ✓குழுவின் கொள்முதல்  பதிவேட்டில் விவசாயி விற்ற விவரத்தை பதிவு செய்து அவருக்கு ரசீது வழங்க வேண்டும்.
- ✓ எல்லா ஆவணங்களிலும் இயற்கை விவசாய முறையில் எந்த நிலையில் இருக்கிறார் என்னும் விவரம் குறிப்பிடப்பட வேண்டும். (ஆர்கானிக் அல்லது conversion).
- ✓ பொருள்களைப் பற்றிய விவரம் தரப்பட்டுள்ள  பகுதியில் முழு அளவு ஆர்கானிக் அல்லது கன்வர்ஷன் என்ற விவரத்தை கொடுக்க வேண்டும்.

# சேமிப்பு மற்றும் கையாளும் முறைகள்

இயற்கை விவசாயப் பொருள்களை கையாளும் போது பொருட்களின் தரம் குறையாமலும் அதற்கு வேண்டிய ஆவணங்கள் சரியான முறையில் தயாரிப்பதும் மிக அவசியம்.

ஆகவே கீழ்க்கண்ட குறைந்தபட்ச முறைகளை கடைபிடிக்க வேண்டும்:

- ✓ அறுவடை முதல் விற்பனை வரை உள்ள எல்லா நிலைகளிலும் அறுவடை செய்யப்பட்ட பண்டங்களின் இயற்கை விவசாய அத்தாட்சி தரத்தை தெரிந்து கொள்ளும் வகையில் ஆர்கானிக் அல்லது conversion என்ற விபரத்தை குறிப்பிட வேண்டும்.
- ✓ தரத்திற்கு தகுந்தபடியும் (முழுமையானஆர்கானிக், கன்வர்சன் மற்றும் இயற்கை விவசாயம் அல்லாத பொருள்கள்) அனுமதிக்கப்படாத முறைகளை (கண்டைனர்களுக்கு புகைமூட்டம் போடுதல், அணுக்கதிர் வீச்சை பயன்படுத்துதல்) விவரிக்கப்பட்டுள்ள பொருட்களை தனித்தனியே பிரித்து வைக்க வேண்டும்.
- ✓ இயற்கை விவசாய பொருள்களை சேமித்து வைக்கும் இடங்களுக்கு ஆர்கானிக் என்று அறிவிப்பு பலகை இருக்க வேண்டும்.
- ✓ இயற்கை விவசாய முறைகளில் குறிப்பிட்டுள்ளபடி சேமிப்பு கிடங்குகளில் பூச்சி நோய் கட்டுப்பாட்டை கடைபிடிக்க வேண்டும்

# இயற்கை விவசாய பொருள்களை பதனிடுதல்

இயற்கை விவசாய சான்று வழங்கும் நிறுவனங்கள் முக்கிய பதனிடும் நிலையங்களை முழு அளவில் ஆய்வு செய்யும்.

1. <u>பதனிடப்படும் பொருள்கள் மற்றும் செயலாக்க உதவிப்பொருள்கள் ஆகியவற்றை விவரிக்க வேண்டும்</u>

✓விவசாய பொருள்களை இயற்கை விவசாய விதிகளின்படி உபயோகிக்க வேண்டும்.

✓விவசாயத்தை அடிப்படையாக இல்லாத பொருள்களாக இருந்தால் அவைகள் விதிகளின்படி அனுமதி உள்ளதாக இருக்க வேண்டும்.

2. <u>தனித்தனியாக பிரித்து அடையாளம் காட்டுதல்</u>

✓அறுவடை முதல் விற்பனை வரை எல்லா நிலைகளிலும் (ஆர்கானிக், கன்வர்சன், மற்றும் ஆர்கானிக் அல்லாதவை) தனித்தனியாக பிரித்து அவற்றை அடையாளம் காட்ட வேண்டும்.

✓பதப்படுத்துதலில் அனைத்து முறைகளையும் ஆவணப்படுத்த வேண்டும்.

- கொள்முதல் கையாளுதல் மற்றும் பதனிடுதல் ஆகியவற்றுக்கான பணியாளர்கள்
    - **கொள்முதல் அலுவலர்**
        - ✓ **விவசாயிகளிடமிருந்து சரியான முறையில் கொள்முதல் செய்ய நியமிக்கப்பட்ட அலுவலர்.**
        - ✓ **கொள்முதல் அலுவலர் அவருக்கென்று ஒதுக்கப்பட்ட கடமைகளை குறிப்பிட்டு எழுதப்பட்ட ஒப்பந்தத்தில் ஐ சி எஸ் ஒருங்கிணைப்பாளர் முன் கையொப்பம் இடுவார்.**
    - **சேமிப்பு கிடங்கு அலுவலர்**
    - **பதப்படுத்தும் அலுவலர்**

# ஐ சி எஸ் குழுவிற்கான இயற்கை விவசாய விதிமுறைகள் என்றால் என்ன?

❖குழுவில் உள்ள இயற்கை விவசாயிகளை ஆய்வு செய்ய குழுவால் ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகள்.




- இயற்கை விவசாய விதிமுறைகளை விவரமாக விளக்குகிறது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட இயற்கை விவசாய விதிமுறைகளின் எளிய விளக்கம். விவசாயிகள் இயற்கை விவசாயியாக ஆக வேண்டும் என்றால் கடைபிடிக்க வேண்டிய முறைகளின் விளக்கம்.
- இது விவசாயிகள் குழுவின் பணியாளர்கள் ஆகியோர் எளிய முறையில் புரிந்து கொள்ள க்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## விவசாய குழுவிற்காக தயாரிக்கப்பட்ட இயற்கை விவசாய விதிமுறைகள்

❖ **அத்தாட்சி பெரும் நோக்கம்:**

✓ இயற்கை விவசாய முறைகளில் எந்தெந்த நோக்கத்திற்காக அத்தாட்சி தேவைப்படுகிறதோ அவற்றை விளக்கமாக இந்த விதிமுறைகளில் குறிப்பிட வேண்டும்.

✓ **உதாரணம்:**

1. விவசாய பொருள்கள் உற்பத்திக்கான அத்தாட்சி பத்திரம் (crop production).
2. கால்நடை மற்றும் கால்நடை பொருள்கள் உற்பத்திக்கான அத்தாட்சி பத்திரம் (Animal husbandry)



# இயற்கை விவசாய குழுவிற்கான விதிமுறைகளில் தேவையான குறைந்தபட்ச அம்சங்கள்




## இந்த விதிமுறைகள் கீழ்கண்ட அம்சங்களை கட்டுப்படுத்துகிறது:



- இயற்கை விவசாயம் இயற்கை அல்லாத விவசாயம்
- மண்வளப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து அளித்தல்
- பயிர் பாதுகாப்பு
- விதை மற்றும் நடவு பொருட்கள்
- பயிர்களின் மீது மருந்து துளிகள் படிவதை தடுத்தல் மற்றும் மாசுபடுவதை தடுத்தல்
- கால்நடை பராமரிப்பு
- அறுவடைக்கும் செய்ய வேண்டிய நேர்த்திகள் மற்றும் பண்ணையிலேயே பதனிடுதல்
- நடப்பு பயிர் முறையில் இருந்து இயற்கை விவசாய முறைக்கு மாறுவதற்கு உண்டாகும் கால அவகாசம்

# குழுவிற்கானஇயற்கை விவசாய விதிகளில் சேர்க்க வேண்டிய அடிப்படை கோட்பாடுகள்(1)






**இயற்கை மற்றும் இயற்கை அல்லாத விவசாயம் உள்ள நிலங்கள்**

- பண்ணையில் அடக்கமான அனைத்து நிலங்களையும் பயிர்களையும் இயற்கை விவசாயத்திற்கு மாற்ற வேண்டும்.
- ஆர்கானிக் மற்றும் ஆர்கானிக் அல்லாத நிலங்களை தனித்தனியாக பிரித்து காட்ட வேண்டும்.
- இயற்கை விவசாய நிலத்தில் அனைத்து விவசாய வேலைகளும் இயற்கை முறையில் நடத்த வேண்டும்.
- ஒரு பயிரை இயற்கை விவசாயத்தில் பயிரிடும் போது அதே பயிரை இயற்கை அல்லாத முறையில் பயிரிடக் கூடாது.
- இடுபொருள்கள் கிடங்கில் இயற்கை விவசாய பொருள்கள் மற்றும் இதர பொருள்களையும் தனித்தனியே வைக்க வேண்டும்.
- இயற்கை விவசாய நிலங்கள் மாசுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**சுயசார்பு முறையில் மண்வளம் பாதுகாத்தல்:**

- பயிர் சுழற்சி, தழை உரம், மண்ணை பாதுகாக்கும் பயிர்கள், மூடாக்கு போடுதல்.
- கம்போஸ்ட் உரத்தை உபயோகித்தல் (பயிர் கழிவுகள் சாணம் ஆகியவை).
- கனிம உரங்களை தேவைக்கு ஏற்ப குறைந்த அளவில் உபயோகித்தல் (இயற்கை விவசாய விதிமுறைகளில் பட்டியல் உள்ளது).
- ரசாயன உரங்களை பயன்படுத்தக் கூடாது (யூரியா போன்ற உரங்கள்).

# குழுவிற்கானஇயற்கை விவசாய விதிகளில் சேர்க்க வேண்டிய அடிப்படை கோட்பாடுகள்(2)



**பயிர் பாதுகாப்பு மற்றும் களை மேலாண்மை**

- பயிரைத் தாக்கும் பூச்சி நோய்களிலிருந்தும் களைகளில் இருந்தும் பாதுகாக்க தகுந்த விவசாய முறைகளை கடைப்பிடிக்கவும். (பயிர் சுழற்சி). இயந்திரங்களை உபயோகப்படுத்தலாம் மற்றும் நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாப்பதோடு இனப்பெருக்கம் செய்து வெளியிடலாம்.
- இயற்கை விவசாய பூச்சி மருந்துகளை அளவோடு பயன்படுத்தலாம்.(பட்டியலை பார்க்கவும்). ரசாயன பூச்சிக்கொல்லிகளை அறவே உபயோகிக்க கூடாது.
- களைகளை நீக்க ரசாயன களைக் கொல்லிகளை பயன்படுத்தக் கூடாது. களைக்கொத்தி மற்றும் கையால் களைகளை அகற்றவும்.



**இயற்கை விவசாய விதைகள் நாற்றுகள் மற்றும் கரணைகள்**

- ஆர்கானிக் விதைகளை உபயோகிக்க வேண்டும்.
- ஆர்கானிக் விதைகள் கிடைக்கவில்லை என்றால் பூச்சி மருந்து பூசப்படாத ஆர்கானிக் அல்லாத விதைகளை பயன்படுத்தலாம்.
- மரபு அணு மாற்றப்பட்ட பயிர்களை பயிர் செய்யக்கூடாது.

**கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பிற்கு தனியாக அங்கக அத்தாட்சி பெறவில்லை என்ற நிலையில்)**

- கால்நடைகளை சரிவர பராமரிக்க வேண்டும்.
- முடிந்தவரை இயற்கை விவசாயத்தில் விளைந்த தீவனத்தை பயன்படுத்த வேண்டும். நோய் தடுப்புக்கான ரசாயன மருந்துகளை பயன்படுத்தக் கூடாது. இயற்கை விவசாய நிலங்களில் மாசுபடுதலை தவிர்க்கவும்.


**அறுவடை மற்றும் அறுவடைக்குப் பிறகு செய்ய வேண்டிய நேர்த்திகள்**

- பிரித்து வைத்தல்
- மாசுபடுதலை தவிர்த்தல்


# இயற்கை விவசாயத்திற்கான தேவைகளை சரிவர புரிந்து கொள்ளுதல்





- ✓ ஐ சி எஸ் குழுவின் அனைத்து அலுவலர்களும் இயற்கை விவசாயத்திற்கான முறைகளில் மற்றும் அங்கக சான்றிதழுக்கு அனுமதி வழங்கும் முறைகளிலும் நன்கு பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.






- ✓ அதேபோல் இயற்கை விவசாய அத்தாட்சி வழங்கும் நிறுவனம் கடைபிடிக்கும் இயற்கை விவசாய மற்றும் ஆய்வு முறைகளையும் தெரிந்திருக்க வேண்டும்

# குழுவில் உள்ள அங்கத்தினர்களை ஆய்வு செய்தல்

பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விவசாயியும் நிலத்தையும் குழுவில் உள்ள ஆய்வாளர் ஆண்டுக்கு இரண்டு முறை ஆய்வு செய்வார். குழுவில் உள்ள அத்தனை நிலங்களையும் 100% அவர் ஆய்வு செய்வார். ஆய்வின் முடிவை ஆவணப்படுத்துவார்.



# குழுவின் ஆய்வாளர் எதையெல்லாம் ஆய்வு செய்வார்?



இயற்கை விவசாயம் மற்றும் இயற்கை அல்லாத விவசாயம் செய்துள்ள நிலங்கள்

விவசாயி வைத்திருக்கும் கையேடு மற்றும் இதர ஆவணங்கள்

ஆய்வில் இதையெல்லாம் கவனிக்க வேண்டும்

அறுவடை மற்றும் பண்ணையில் செய்யப்படும் பதனிடுதல்

தானியக்கிடங்கு மற்றும் உரம் பூச்சி மருந்து கிடங்கு

கால்நடைகள்

நிலங்களின் வரப்புகளை சுற்றிப் பார்த்து மாசுபடுவதற்கான வாய்ப்புகளை ஆய்வு செய்தல்

# குழுவின் ஆய்வாளர் ஆய்வு செய்யும் போது கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள்:



**விவசாய நிலத்தில் விளையும் அத்தனை பயிர்களையும் ஆய்வு செய்யப்பட்டதா?**

- Eg. இயற்கை முறையில் பயிரிடப்பட்டுள்ள மிளகு பயிருக்கு இடையில் இயற்கை முறை அல்லாத ஏலக்காய் பயிரிடுதல்.
- இயற்கை விவசாய நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள அத்தனை பயிர்களும் ஆய்வு செய்யப்பட்டதா?
- இ.வி. நிலங்களில் ஊடு பயிர்களின் விதைகள் ஆய்வு செய்யப்பட்டதா?

**விவசாயி பராமரிக்கும் எல்லா நிலங்களையும் இயற்கை விவசாயத்திற்கு பதிவு செய்துள்ளாரா?**

- ஒரே பயிரை இயற்கை விவசாயத்திலும் இயற்கை அல்லாத விவசாயத்திலும் பயிரிடப்படவில்லை.
- விவசாயியும் மொத்த விவசாய நடவடிக்கைகளும் தெரிந்திருக்க வேண்டும்.
- சாதாரண பயிருக்கு பயன்படுத்தும் ரசாயன உரம் பூச்சி மருந்துகளை எங்கு சேமித்து வைத்திருக்கிறார்?
- இயற்கை விவசாயியின் சாதாரண நிலங்களையும் அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும். (அருகில் இருந்தால் அவசியம் ஆய்வு செய்ய வேண்டும்.)

# குழுவில் உள் ஆய்வு செய்வதனால் கிடைக்கும் பெரும் பயன்கள்

உள் ஆய்வினால் சிறந்த பலன் கிடைக்கும். குழுவின் இயற்கை விவசாய விதிகள் மற்றும் அத்தாட்சி வழங்கும் நிறுவனம் பயன்படுத்தும் விதிகள் ஆகியவற்றிற்கு விதி மீறல்கள் இருந்தால் முழுவதையும் கண்டறியலாம்.

விதி மீறலுக்கான தண்டனையை வழங்கலாம். விவசாயக் குழு இவற்றை தொடர்ந்து கண்காணிக்கும்.

ஆய்வு அறிக்கையை முடித்தபின் ஆய்வாளரும் விவசாயியும் அறிக்கையில் கையொப்பமிட வேண்டும்.

ஆய்வாளரின் ஆய்வு மட்டுமல்லாமல் விரிவாக்க பணியாளரும் விதி மீறல்களை பதிவு செய்யலாம்.



# குழுவின் ஆய்வாளர்கள் சிறந்த முறையிலும் பாகுபாடற்ற முறையிலும் ஆய்வு செய்ய பயிற்சி பெற்றிருப்பார்கள். ஒவ்வொரு ஆய்வாளரும் ஆண்டுக்கு ஒரு முறையாவது பயிற்சி பெற்றிருப்பார்



- குழுவின்ஆய்வாளர்களின் கல்வி மற்றும் இதர தகுதிகள் பற்றி அத்தாட்சி வழங்கும் நிறுவனத்தின் ஆய்வாளர் அவர் ஆய்வு செய்யும்போதும், சாட்சி ஆய்வு செய்யும் போதும் நேர்காணல் மூலமும் தெரிந்து கொள்ளலாம்.
- அவர்கள் முழுமையாக ஆய்வு செய்ய தகுதி உள்ளவர்கள் தானா? (முதிர்ச்சியடைந்த விவசாயிகளிடம் மிக முக்கிய கேள்விகளை கேட்க அச்சப்படும் அளவிற்கு மிகவும் வயது குறைந்த ஆய்வாளர்களாக இருக்க வாய்ப்புண்டு).
- ஆய்வாளர்களுக்கு கொடுக்கப்படும் பயிற்சி சிறப்பாக இருக்க வேண்டுமென்றால் தேர்ச்சி பெற்ற ஆய்வாளர்கள் மேற்பார்வையில் ஆய்வு செய்ய வைக்கலாம். பண்ணை ஆய்வின் போதும் பயிற்சி அளிக்கலாம்.
- பயிற்சி விவரங்கள் மற்றும் பயிற்சி பெற்றவர்களின் பட்டியல் ஆகியவை ஆவணப்படுத்த வேண்டும்.

# விளைச்சல் மதிப்பீடு

குழுவின் ஆய்வாளரும் களப்பணியாளரும் அறுவடைக்கு முன்பே விளைச்சலை மதிப்பிட உரிய முறைகளை தெரிந்திருக்க வேண்டும்.

விளைச்சல் மதிப்பீடு முடிந்த அளவுக்கு சரியாக இருக்க வேண்டும்.

அறுவடைக்கு முன்பு விளைச்சல் மதிப்பீட்டை செய்ய வேண்டும்.



# நோக்கங்கள் பொருந்தாத சூழ்நிலை
## (CONFLICT OF INTEREST)

### குழுவின் சீரான முடிவுகள் நோக்கங்கள் பொருந்தாத சூழ்நிலையால் சீரழியக் கூடாது

- நோக்கங்கள் பொருந்தாத சூழ்நிலை ஏற்படாது என்ற உத்தரவாதத்தை ஆய்வாளரும் ஆய்வுக்கு ஒப்புதல் அளிப்பவரும் ஐ சி எஸ் குழுவின் ஒருங்கிணைப்பாளருக்கு அளிக்க வேண்டும்.

- நோக்கங்கள் பொருந்தாத சூழ்நிலையை தவிர்க்க வேண்டும். தன்னுடைய சொந்தமான அல். குடும்பத்தினர் அல்லது நண்பர்கள் நிலைத்தை ஆய்வோ அல். ஒப்புதலோ செய்யக்கூடாது.

- ஒருவேளை இந்த சூழ்நிலை நேர்ந்தால் எடுக்கப்பட்ட முடிவால் எந்த நியாயமற்ற முடிவுக்கு வருதல்?

- முக்கியமான உண்மைகள் மறைக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.



An inspector cannot inspect his close friends or family

# ஆய்விற்கும் களப்பணிக்கும் உள்ள வித்தியாசம்

- குழுவின் ஆய்வாளர் இயற்கை விவசாய விதிகள் அனைத்தும் கடைபிடிக்கப்பட்டு இருக்கின்றனவா என்று ஆய்வு செய்வார்.

- களப்பணியாளர் பயிர்களை மேற்பார்வை செய்வதோடு விவசாயிக்கு ஆலோசனையும் அவருடைய கையேடு போன்ற ஆவணங்களை பூர்த்தி செய்து உதவுவார்.

- அத்தாட்சி வழங்கும் நிறுவனத்தின் ஆய்வாளர் குழுவின் ஒவ்வொரு விவசாயியையும் நேரடியாக ஆய்வு செய்வதற்கு பதில் குழுவில் உள்ள ஆய்வாளர் அவருக்கு பதில் முழு அளவில் ஆய்வு செய்வார். இதன் மூலம் குழுவின் மொத்த உறுப்பினர்களின் நிலங்களும் பாரபட்சமின்றி ஆய்வு செய்யப்பட்டு ஆவணங்கள் தயார் செய்து முடிவு செய்யப்படுகிறது.

# ஆய்விற்கும் களப்பணிக்கும் உள்ள வித்தியாசம்.




- களப்பணியாளர்களின் வேலை இயற்கை விவசாய அத்தாட்சி பணியில் முக்கியமான ஒன்று. அவர்கள் சில சமயங்களில் குழுவில் ஆய்வாளராகவும் பணியாற்றுவார்கள்.

- களப்பணியாளர்கள் பெரும்பாலும் பணி புரியும் கிராமத்தை சேர்ந்தவர்களாகவும் விவசாயிகளுக்கு மிகவும் தெரிந்தவர்களாகவும் இருப்பதால் ஆய்வு செய்யும் பணிக்கு ஏற்றவர்கள் அல்ல.

- ஐ சி எஸ் குழுக்களை நடத்தும் பலர் இந்தப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு கண்டிருக்கிறார்கள். ஒரு ப்ராஜெக்ட் களப்பணியாளராக வேலை செய்யும் ஒருவர் மற்றொரு ப்ராஜெக்ட்டில் ஆய்வாளராக செல்வார்.

- சில சமயங்களில் களப்பணியாளரே ஆய்வாளராகவும் ஒரே ப்ராஜெக்ட்டில் பணியாற்ற வாய்ப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் களப்பணியாளர் முடிந்த வரை விவசாயிக்கு நெருக்கமானவராக இல்லாமல் இருப்பது நல்லது. களப்பணியும் ஆய்வு செய்தலும் தனித்தனி நாட்களில் இருக்க வேண்டும்.

- பொதுவாக ஆய்வாளர்கள் ஆலோசனை வழங்கக் கூடாது. ஆனால் இயற்கை விவசாய விதிமுறைகளை பற்றி எடுத்து சொல்வது ஆலோசனை ஆகாது ஆகவே இந்த வகையான ஆலோசனைகளை விவசாயிக்கு வழங்கலாம்.


# குழுவிற்குள் நிலங்களை ஆய்வு செய்தல்

- குழுவில் பதிவு பெற்றுள்ள ஒவ்வொரு விவசாயியின் நிலமும் ஆண்டுக்கு இருமுறை ஆய்வு செய்யப்படும். அத்தாட்சி வழங்கும் நிறுவனம் ஆய்வு மேற்கொள்வதற்கு முன்னரே ICS குழுவின்ஆய்வு முடிய வேண்டும்.
- இந்த ஆய்வின் மூலம் அனைத்து விவசாயிகளும் இயற்கை வேளாண்மை விதிமுறைகளை முழுவதும் கடைப்பிடிக்க ஏதுவாகிறது.
- விதிமுறைகளை கடைபிடிக்காத விவசாயிகளை குழுவில் இருந்து விலக்கி வைக்கப்படும்.
- இயற்கை விவசாய விளைச்சலை மற்ற சாதாரண விளைச்சலுடன் கலந்து விடாமல் தனியாக வைத்திருக்க வேண்டும்.
- ஆய்வு அறிக்கைகளில் முடிவை சரியாக ஆவணம் செய்ய வேண்டும்.
- தண்டனை பட்டியலை சரிவர பயன்படுத்தி விதி மீறியவர்களுக்கு பாரபட்சமின்றி தகுந்த தண்டனை அளிக்க வேண்டும்.


- **விவசாயிகளை அனுமதிக்கவும் அல்லது நிராகரிக்கவும் வேண்டிய வழிமுறைகள் குழுவிடம் இருக்க வேண்டும்.**

- ஐ சி எஸ் குழுவின் ஒருங்கிணைப்பாளர் அனைத்து ஆய்வு அறிக்கைகளையும் சீராய்ந்து சரியாக இருந்தால் அங்கீகரித்து அதன்பின் விவசாயிகளின் பட்டியலில் சேர்ப்பார்.


- எல்லா உள்கட்ட ஆய்வு அறிக்கைகளையும் அங்கீகாரம் அளிக்கும் அலுவலர் ஆய்வு செய்வார். மிகவும் கடினமானதும் முக்கியமானதும் ஆனஆய்வறிக்கைகளை முக்கியமாக சீர் ஆய்வு செய்வார். குழுவின் ஆய்வாளர் எவ்விதம் ஆய்வு செய்தார்? அங்கக விவசாய அத்தாட்சியின் இன்றைய நிலை என்ன? முடிவு செய்து தேவையான நிபந்தனைகளை விதிப்பார்.



- **ஐ சி எஸ் குழுவில் பயிர்களை ஆய்வு செய்த பின் அத்தாட்சி வழங்க அங்கீகரிப்பவர் தகுதி வாய்ந்த ஒருவரோ அல்லது கமிட்டியோ இருக்க வேண்டும்.**




- ✓ அங்கீகாரம் செய்பவர் தகுதி வாய்ந்தவராகவும் பாரபட்சம் இல்லாமல் முடிவு எடுப்பவராகவும் இருக்க வேண்டும்.
- ✓ அவர் தன்னை பற்றிய தகவல், நோக்கங்கள்-பொருந்தா நிலை (conflict of interest) ஏற்படாது என்கிற உத்தரவாதம், எழுத்து மூலமாக ஒரு ஒப்பந்தம், பொறுப்பு பட்டியல் ஆகியவை குழுவிற்கு கொடுக்க வேண்டும்.



# தண்டனை வழங்கும் முறைகள்

## சிறிய நடுத்தர பெரிய அளவிலான விதிமீறல்(NC) இருந்தால் முறைப்படி தவறுகளை திருத்த வேண்டும்




- எந்தெந்த விதி மீறலுக்கு என்ன விதமான தண்டனை என்னும் பட்டியல் தயாராக இருக்க வேண்டும். விதிமீறல் நடந்தால் அதன் விளைவு என்ன என்பதை விளக்க வேண்டும். மேலும் அந்த தண்டனையை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.
- சம்பந்தப்பட்ட பணியாளர்கள் அனைவருக்கும் இது தெரிய வேண்டும்.
- தண்டனையை ஆவணப்படுத்த வேண்டும். தண்டனை பெற்ற விவசாயிகள் பட்டியலில் இவர் பெயரை சேர்க்க வேண்டும்.
- இவருடைய பண்ணைக்கோப்பில் இந்த தண்டனை குறித்த விவரங்களை சேர்க்க வேண்டும்.




- தடை செய்யப்பட்ட பொருள்களை பயன்படுத்தி இருந்தால் அவர் மூன்று ஆண்டுகள் மறுபடியும் அத்தாட்சி பெறுவதற்கான நடைமுறைகளை தொடர வேண்டும்.



- மாசு படிந்த பொருட்களை இயற்கை விவசாய அத்தாட்சி பொருளாக விற்பனையாகி இருந்தால் அதன் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டு இருக்க வேண்டும். விவசாயிகள் தகுந்த நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.





இரண்டாம் வருட ஆய்வு முதல் ஒவ்வொரு விவசாயிக்கும் பட்டியலில் குழுவின் உள் அங்கீகார நிலையை தெரிவிக்க வேண்டும். அதாவது முதல் ஆண்டு கன்வெர்ஷன், இரண்டாம் ஆண்டு கன்வெர்ஷன், தடை செய்யப்பட்ட விவசாயி போன்ற விவரங்களை தர வேண்டும்.

# சிக்கல்கள் இருந்தால் என்ன செய்ய வேண்டும்?

**பிரச்சனை** →

**விசாரிக்கவும்**
- என்ன நடந்தது?
- ஏன்?
- எப்பொழுது?
- எந்த பொருள் பாதிக்கப்பட்டுள்ளது?

→

**முடிவு**
- ஆர்கானிக் ஒப்புதல் மேலாளர் மூலம்
- தடைகள்
- சரிப்படுத்தும் நடவடிக்கைகள்

↓

**செயல்படு!**
**ஆவணம்!**

குறிப்பு: கடுமையான பிரச்சனைகள் - எப்போதும் ICS ஒருங்கிணைப்பாளரிடம் உடனடியாகப் புகாரளிக்கப்பட வேண்டும்

# பலவித தண்டனை மாதிரிகள்


| தண்டனை வகைகள் | தண்டனைக்கான காரணம் |
| --- | --- |
| • எழுத்து மூலம் எச்சரித்தல் | • ஆவணங்களில் சிறிய தவறுகள், - பண்ணை பராமரிப்பில் சிறு தவறுகள், - இயற்கை விவசாய விதிகளை கடைபிடிப்பதில் சிறு தவறுகள். |
| • அபராத தொகை | • ஒரே காரணத்திற்காக பல தடவை எழுத்து மூலம் எச்சரித்தல். - கட்டுப்பாடுகளுக்கு செவி சாய்க்காமல் இருப்பது. - ஆவணங்கள் பராமரிப்பில் பெருமளவு குறைகள். |
| • தவறுகளை திருத்தும் வரை சிறிது காலத்துக்கு இடைநீக்கம் செய்தல் | • சிறு தவறுகளை திரும்பத் திரும்ப செய்தல் - இயற்கை விவசாய விதிமுறைகளை ஓரளவு மீறினாலும் பண்டங்களின் ஆர்கானிக் நிலைக்கு குந்தகம் விளையாமல் இருப்பது. |
| • விவசாயிகளின் அங்கக அத்தாட்சி பத்திரத்தை ரத்து செய்தல். மறுபடியும் ஆறு மாதங்கள் இயற்கை விவசாயம் செய்து அத்தாட்சி பெற வேண்டும். | • இயற்கை விவசாய விதிமுறைகளை மதிக்காமல் இருப்பதோடு பொருள்களின் அங்கக நிலைக்கு பாதகம் ஏற்படுத்தி உள்ளார். |
| • விவசாயியை சங்கத்தின் அடிப்படை அங்கத்தினர் நிலையிலிருந்து முழுமையாகவோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு தடை செய்வது. | • மோசடி செய்வது அல்லது ஆய்வாளரை ஆய்வு செய்ய விடாமல் தடுப்பது மற்றும் அனுப்பும் கடிதங்களுக்கு பதில் அளிக்க மறுப்பது. |

# விதி மீறல் மற்றும் அதற்கான தண்டனை மாதிரிகள்

| விதி மீறல் மாதிரி | தண்டனை மற்றும் எதிர் விளைவு மாதிரிகள் |
|---|---|
| விவசாயி இயற்கை முறை பயிர் மீது ரசாயன மருந்து தெளித்துள்ளார். | அத்தாட்சி பத்திரத்தை மூன்று ஆண்டுகளுக்கு முடக்கம். மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.<br><br>தேவைப்பட்டால் இயற்கை வேளாண்மை குழுவில் இருந்து வெளியேற்றப்படலாம்.<br><br>இவருடைய ஆர்கானிக் பண்டங்கள் ஏற்கனவே விற்பனைக்கு போயிருக்கிறதா என்பதை கண்காணிக்க வேண்டும். |
| விவசாயி இயற்கை விவசாய பயிர்களுக்கு மத்தியில் பயிரிடப்பட்ட காய்கறிகளுக்கு மருந்து தெளித்து உள்ளார். | அத்தாட்சி பத்திரத்தை மூன்று ஆண்டுகளுக்கு முடக்கம். மறுபடியும் முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.<br><br>தேவைப்பட்டால் இயற்கை வேளாண்மை குழுவில் இருந்து வெளியேற்றப்படலாம்.<br><br>இவருடைய ஆர்கானிக் பண்டங்கள் ஏற்கனவே விற்பனைக்கு போயிருக்கிறதா என்பதை கண்காணிக்க வேண்டும்.<br><br>இயற்கை விவசாய தோட்டத்திற்கு வெகு தொலைவில் உள்ள ஒரு தோட்டத்தில் விவசாயி வீட்டு காய்கறி தோட்டங்களுக்கு மருந்து அடித்துள்ளார். பன்னாட்டு விதிகளின்படி இது ஒரு அத்துமீறல்.<br><br>விவசாயியை ஓராண்டுக்கு இடை நீக்கம் செய்தல்.<br><br>வரைபடத்தில் மருந்து அடித்த நிலத்தை கன்வென்ஷனல் நிலம் என்று குறிக்க வேண்டும்.<br><br>விவசாயிக்கு அதிகப்படியான பயிற்சி அளிக்க வேண்டும். |

| | |
|---|---|
| விவசாயி நிலத்தை சரிவர பராமரிக்காமல் மண் வளத்தை பெருக்காமல் விட்டு வைத்துள்ளார். | எழுத்து மூலமாகவோ வாய் மூலமாகவோ விவசாயிக்கு தகுந்த நிபந்தனை விதிக்கலாம்.<br><br>கூடுதல் பயிற்சி அளிக்க வேண்டும்.<br><br>மேலும் இது தொடர்ந்தால் அவர் குழுவில் அங்கத்தினராக தொடரலாமா என்பதை பற்றி யோசிக்க வேண்டும். |
| அங்கீகாரம் முடக்கப்பட்ட விவசாயின் பண்டங்களை இயற்கை விவசாய பண்டங்களுடன் கலந்து விற்பனை செய்தல். | எந்த பங்கு மாசு படிந்து இருக்கிறதோ அந்த பங்கை கன்வென்ஷனல் என்று அடையாளம் இட்டு விற்க வேண்டும். விவசாயி மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சலை காட்டிலும் இரண்டு மடங்கு பொருளை விற்பனை செய்கிறார்.<br><br>களப்பணியாளரை அந்த விவசாயியை சந்திக்க வைத்து விசாரிக்க வேண்டும். விவசாயி மற்றவர்களின் பண்டங்களை தன்னுடைய விளைச்சலுடன் கலந்து விற்பனை செய்திருந்தால் அவரை குழுவில் இருந்து விலக்க வேண்டும்.<br><br>கொள்முதல் பணியாளர் அங்கக அத்தாட்சி இல்லாத விவசாயிடமிருந்து பண்டங்களை வாங்கி இருக்கிறார்.<br><br>அங்கக அத்தாட்சி இல்லாத அந்த பண்டம் இப்போது எங்கே இருக்கிறது என்பதை கண்டுபிடிக்கவும்.<br><br>அந்தப் பண்டத்தை ஆர்கானிக் நிலையிலிருந்து கன்வென்ஷனல் நிலைக்கு உடனே மாற்றவும்.<br><br>ஏற்கனவே விற்பனையாக இருந்தால் அத்தாட்சி தந்த நிறுவனத்திற்கு இந்த செய்தியை தெரிவிக்கவும்.<br><br>கொள்முதல் அலுவலருக்கு மேலும் பயிற்சி அளிக்கவும் அல்லது அவர் செய்திருந்தால் அவரை வேலையை விட்டு நீக்கவும். |

# ஒரு விவசாயி இயற்கை விவசாய தோட்டத்தில் தடை செய்யப்பட்ட பொருள்களை உபயோகித்து இருப்பதாக கண்டறியப்பட்டால் அதன் விளைவுகளும் அதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும்



விவசாயின் தோட்டம் மீண்டும் முதலிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு இயற்கை விவசாய விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்

தண்டனை பற்றிய தகவலை பண்ணை குறிப்பு புத்தகம், குழுவில் உள்ள அங்கத்தினர் பட்டியல், கொள்முதல் பட்டியல் ஆகியவற்றில் குறிப்பிட வேண்டும்

விவசாயி ஏற்கனவே அவருடைய விளைச்சலை பெற்று விட்டாரா என்பதை உறுதி செய்ய வேண்டும்



விவசாயிக்கு மூன்று ஆண்டு தண்டனை தர வேண்டும்

இந்த விவசாயியின் விளைச்சல் மற்ற இயற்கை விவசாய பொருட்களுடன் கலந்து விட்டதா என்பதை அறிய வேண்டும்

இந்த விவசாயின் பண்டம் ஏற்கனவே கலப்படம் ஆகியிருந்தால் உடனே அத்தாட்சி வழங்கும் நிறுவனத்திற்கு தெரிவிக்க வேண்டும். அடுத்த அறிவுரை வரும் வரை அந்த பண்டத்தை தனியாக வைக்க வேண்டும்.

தண்டனைக் காலத்தில் இந்த விவசாயி இடம் இருந்து இயற்கை விவசாய பண்டங்களை கொள்முதல் செய்யக்கூடாது என்று களப்பணியாளருக்கும் கொள்முதல் செய்யும் பணியாளருக்கும் அறிவிக்க வேண்டும்.

# குறைந்தபட்ச பண்ணை ஆவணங்கள்



**கீழ்க்கண்ட ஆவணங்கள் ஒவ்வொரு விவசாயியும் வைத்திருக்க வேண்டும். இவற்றை பண்ணை கோப்பில் வைத்திருக்க வேண்டும்:**

- குழுவில் விதிமுறைகளை மதித்து நடப்பேன் என்று விவசாயிகள் எழுதிக் கொடுத்த சம்மத பத்திரம்.
- அடிப்படை விவரங்கள் அடங்கிய படிவம். பண்ணையின் கடந்த கால செயல்கள் அடங்கிய நுழைவுப் படிவம்.
- புதுப்பிக்கப்பட்ட உற்பத்தி தகவல்.
- வயலுக்கான வரைபடம்.
- களப்பணியாளர்கள் விவசாயிகளுக்கு நடத்திய பயிற்சி மற்றும் இதர முக்கிய ஆலோசனைகள் பற்றிய குறிப்புகள்.
- வருடாந்திர பண்ணை ஆய்வுக்கான சரிபார்ப்பு பட்டியல்.

# குழுவிற்கான கட்டுப்பாட்டு விதிகளின் சுருக்கம்



## குழுவின் கட்டுப்பாட்டு விதிகள் மூலம் இறுதியாக கிடைக்கும் நன்மைகள்:

- **கீழ்க்கண்ட விவசாயிகளின் பட்டியல்**
    - விவசாயிகளின் குறியீட்டு எண் அடங்கிய பெயர் பட்டியல்
    - மொத்த நிலப்பரப்பு மற்றும் இயற்கை விவசாய நிலப்பரப்பு
    - பதிவு செய்யப்பட்ட தேதி மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் கடைசியாக உபயோகித்ததேதி
    - குழுவில் உள் ஆய்வு செய்யப்பட்ட தேதி மற்றும் ஆய்வின் முடிவு
    - உள்ளாய்வு செய்த ஆய்வாளரின் பெயர்




- **தண்டனை பெற்ற விவசாயிகளின் பட்டியல் மற்றும் தண்டனை காலம்**

# <u>அங்கீகரிக்கப்பட்ட  மற்றும் தடை விதிக்கப்பட்ட விவசாயிகள் பட்டியல்:</u>

| விவசாயியின் குறியீட்டு எண் | விவசாயின் பெயர் | கிராமத்தின் பெயர் | இயற்கை விவசாயம் தொடங்கிய தேதி | ரசாயன இடுபொருள்கள் கடைசியாக உபயோகித்த தேதி | பண்ணையின் மொத்த பரப்பளவு | பண்ணையில் இயற்கை விவசாய பரப்பளவு | இயற்கை விவசாயம் செய்யப்படாத பரப்பளவு | சென்ற ஆண்டு அறுவடை | இந்த ஆண்டின் அறுவடை மதிப்பீடு 2023 | குழுவின் உள் ஆய்வாளரின் பெயர் | ஆய்வு செய்த தேதி | உள் ஆய்வின் முடிவு | குழு அளித்த அங்கீகாரம் | தண்டனைக்கான காரணம் மற்றும் காலகெடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இயற்கை விவசாய அத்தாட்சி பெற்றவர்களின் பட்டியல் | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| அத்தாட்சி பெற இடைநிலையில் இருப்பவர்களின் பட்டியல் | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| தண்டனை பெற்ற விவசாயிகளின் பட்டியல் | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

# உறுதிமொழி பத்திரம் மற்றும் ஒப்பந்தம்



**கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்:**

<u>விவசாயிகளின் கடமை:</u>

- குழுவின் உள்மட்ட இயற்கை விவசாய விதி முறைகளை கடைப்பிடித்தல்
- நிலம் கிடங்கு மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்ய அனுமதி தருதல்
- விதிகளை மீறினால் தண்டனையை ஏற்றுக் கொள்ளுதல்


<u>இயற்கை விவசாய விதிமுறைகள்</u>

- குழுவின் உள்கட்ட இயற்கை விவசாய விதிமுறைகள் பற்றிய ஒரு சிறிய குறிப்பு



# விவசாயிகளின் ஒப்பந்தம்






**ஒப்பந்தத்தில் உள்ள இதர அம்சங்கள்:**

- ஐசிஎஸ் ஒருங்கிணைப்பாளர் விவசாயிகளுக்கு ஒத்துழைப்பு தந்து தேவையான ஆலோசனை வழங்குவார். அதுமட்டுமின்றி குழுவில் உள்ள உள் கட்ட ஆய்வுகளுக்கும் அத்தாட்சி வழங்கும் நிறுவனத்தின் ஆய்வுகளுக்கும் உரிய குழுவில் இருந்து விலகுவதற்கான விதிமுறைகள் மற்றும்ஒத்துழைப்பு தருவதோடு விவசாயிகளின் பண்டங்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்வார்.
- விலை மற்றும் பண்டங்களின் தரம் பற்றிய விவரங்கள்.
- குழுவில் இருந்து விலக விதிகள் மற்றும் ஒப்பந்தத்தை ரத்து செய்தல்.
- மற்ற விவசாயிகள் செய்யும் விதி மீறல்களை ஐசிஎஸ் குழு ஒருங்கிணைப்பாளருக்கு தெரிவித்தல்.

# விவசாயிகளின் விவரத்தை பற்றிய படிவம்




## இந்தப் படிவத்தில் கீழ்கண்ட விவரங்கள் இருக்க வேண்டும்:



- விவசாயியின் பெயர் விலாசம் அவரின் குறியீட்டு எண் மற்றும் குழுவில் சேர்ந்த தேதி
- விவசாயி வைத்திருக்கும் மொத்த நிலத்தின் விவரம்
- இயற்கை விவசாயம் செய்யப்படும் பகுதியில் உள்ள விஸ்தீரணம் மற்றும் மரங்களின் எண்ணிக்கை
- கால்நடைகள் எண்ணிக்கை
- தோட்டத்தில் எல்லா பகுதிகளிலும் கடைசியாக மருந்து தெளித்த தேதி

- நிலத்தின் உள்பகுதிகளையும் சரியாக பதிவு செய்ய வேண்டும். பயிர்களைப் பற்றிய விவரங்களை வரைபடத்திலும் காண்பிக்கலாம்.
- ஒவ்வொரு பிளாட்டிலும் என்னென்ன பயிர் வைக்கப்பட்டிருந்தது என்னும் வரலாற்றை கொடுப்பது சிறந்தது.

# வரைபடங்கள்





**விரிவான வரைபடம் (கிராமம் அல்லது குழு)**

- இதில் ஒவ்வொரு விவசாயியின் நிலம் அமைந்துள்ள இடம் மற்றும் குறியீட்டு எண்ணும் இருக்கும்.



**சுழற்சி முறையில் குறுகிய கால பயிர்கள் மற்றும் இயற்கை விவசாயம் இல்லாத பயிர்கள் இருக்கும் போது ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு வரைபடம் இருக்க வேண்டும்.**

- நிலத்தையும் நிலத்தில் உள்ள தளைகளையும் அதில் உள்ள பயிர்களையும் காட்ட வேண்டும்.
- பக்கத்தில் இருக்கும் நிலம் அவர்களின் பயிர் சாகுபடி முறை மற்றும் அங்கு தெளிக்கப்படும் பூச்சி மருந்து காற்றின் மூலம் பரவுவது ஆகியவற்றை குறிப்பிட வேண்டும்.
- வழிகாட்டி அடையாளங்கள் பாதைகள் ஆகியவற்றை காட்ட வேண்டும்.
- முடிந்தால் பக்கத்து நிலத்தின் தளைவாரியாக பயிர் விவரத்தை கொடுக்கவும்.

**வரைபடங்களில் தேதி குறிப்பிடவும்**

# மாதிரி வரைபடம்



Map 02-05 + 02-06
2003
other farms (only coffee)
ginger planted 09/02
0,3ac
ginger planted 01/03
0,3ac
Bushes
Bushes
not cultivated
coffee banana
02-05
MAIZE CONVENTIONAL
Pineapple
Cassava
Coffee Banana
fruit trees
conventional vegetable garden
cows
not cultivated
2,5ac
Ginger 08/02
Coffee Banana
MAIZE conventional
02-06
Ginger 08/02
Banana
very low yield, bad management, erosion problems
ginger 08/02
Cassava Banana
Banana
Additional plot (2)
02-05
banana coffee
4ac
0,5ac
Zulaiman's Shop
← Shanga
→ Morogoro
Dwell

# குழுவின் உள்கட்ட ஆய்வின் சாராம்சம்

*(INTERNAL INSPECTION SUMMARY)*



**கீழ்க்கண்ட அத்தாட்சிக்கு அவசியமான பண்ணை சம்பந்தப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன**

- சாகுபடி செய்யும் முறை இடுபொருள்கள் உபயோகம் மண்வளத்தை பராமரித்தல் விதைகள் தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றை ஆய்வு செய்யப்படும்.
- மாசு படுவதற்கான வாய்ப்புகள் உண்டா என்று ஆய்வு செய்ய வேண்டும் (காற்றில் கலந்து வரும் மருந்து துளிகள், தெளிப்பான்கள் உபயோகம், இடு பொருள்கள் சேமிப்பு).
- ஒரு பகுதி மட்டும் இயற்கை விவசாயம் செய்தால் அதன் விவரங்கள்
- தற்சார்பு கால்நடை பராமரிப்பு
- விளைச்சலை மதிப்பிடுதல்
- அறுவடை மற்றும் அறுவடைக்கு பின் செய்ய வேண்டிய நேர்த்திகள்

*ஆய்வின் போது இயற்கை விவசாய நிலங்களை ஆய்வு செய்யும் போது மற்ற கன்வென்ஷனல் நிலங்களையும் சேர்த்து ஆய்வு செய்ய வேண்டும்.*

# விளைச்சல் மதிப்பீடு



- குழுவின் உள்கட்ட ஆய்வாளர் விவசாயிகளின் விளைச்சல் மதிப்பீட்டை அறுவடைக்கு முன்பே மதிப்பீடு செய்ய வேண்டும்.





# குழுவின் உட்கட்ட பண்ணை ஆய்வு அறிக்கையில் இயற்கை விவசாய விதிகள் பின்பற்றப்பட்டுள்ளனவா?



**இதை அறிக்கையில் தெளிவாக கூற வேண்டும்.**

- குழுவிற்கான இயற்கை விவசாய விதிகளின்படி விவசாயி விளைவித்திருக்கிறாரா என்று ஆய்வு செய்ய வேண்டும்.
- விதிமீறல் இருந்தால் அதற்கான தண்டனையை நிர்ணயம் செய்தல்.
- கடந்த ஆண்டு குறிப்பிட்ட விதி மீறல்கள் திருத்தப்பட்டனவா என்று பார்க்கவும்.
- ஆய்வு அறிக்கையில் விவசாயியும் ஆய்வாளரும் கையொப்பம் இட வேண்டும்.

# பண்ணை கையேடு விவரங்களை புதுப்பித்தல்

- அனைத்து இயற்கை விவசாய வேலைகளையும் பண்ணை கையேட்டில் குறித்து வரவேண்டும்.

  - முக்கியமான விவசாய வேலைகள்.
  - விதைகள் உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் உபயோகம்.
  - அறுவடையான அளவு.
  - நிலப்பரப்பில் மாற்றங்கள்.

- விவசாயி அல்லது களப்பணியாளர் தொடர்ந்து பதிவிட்டு வர வேண்டும்.
- குழுவின் ஆய்வாளர் ஆய்வின்போது தகவல் தேவைகளை தொகுத்து எழுதுவார்.



# டிரேஸ் நெட்டில் மேலும் பதிய வேண்டிய விவரங்கள்

- விவசாயி அடிப்படை தகவல்கள்,
- பயிர் மற்றும் நில அளவு,
- குழுவின் ஆய்வாளரின் பெயர் மற்றும் ஆய்வு தேதி,
- அந்த ஆண்டில் நடந்த இரண்டு ஆய்வுகளிலும் ஆய்வாளர் கவனித்த விதி மீறல்கள் மற்றும் அதற்காக விவசாயி செய்த திருத்தங்கள்,
- விளைச்சல் மதிப்பீடு.

- மேற்கண்ட விவரங்களை டிரேஸ் நெட்டில் பதிவு செய்து அத்தாட்சி தரும் நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும்.
- நிறுவனம் இந்த விவரங்களை சரி பார்த்து ஏதேனும் சந்தேகம் இருந்தால் அவற்றைக் கேட்டு அதற்கேற்ற மாற்றம் செய்வார்கள். அதற்குப் பிறகு நிறுவனத்தின் ஆய்வாளரை ஆய்வு செய்ய அனுப்பி வைப்பார்கள்.

# அத்தாட்சி வழங்கும் நிறுவனம் ஆய்வு செய்தல்




குழுவிற்கு முன்கூட்டியே தெரிவித்த பின் நிறுவனம் தன்னுடைய ஆய்வாளரை ஆய்வுக்கு அனுப்பி வைப்பார்கள்.

ஆய்வாளர் குழுவின் தளத்திற்கு வந்து குறிப்பிட்ட சில வயல்களையும் சேமிப்பு கிடங்குகளையும் இடுபொருள்கள் சேமித்து வைத்துள்ள இடங்களையும் மேற்பார்வையிட்டு சரிவர என் பி ஓ பி(NPOP) மற்றும் என் ஓ பி(NOP) விதிகளை அனுசரித்தார்களா என்று ஆய்வு செய்வார்.

ஆய்வாளர் குழுவின் பலவித ஆவணங்களை பார்வையிட்டு சிலவற்றை அத்தாட்சி வழங்கும் பணிக்காக நகல் எடுத்துக்கொண்டு செல்வார்.

# மாதிரி எடுத்தல்



தேவையை பொருத்து ஆய்வாளர் மண், விதைகள், விளைச்சலின் ஒரு சிறு பகுதி, இடுபொருள்கள் ஆகியவற்றின் மாதிரிகளை எடுத்து ஆய்வுக்கு அனுப்பி வைப்பார். இதன்மூலம் இயற்கை விவசாயம் செய்த பயிருக்கு ரசாயன பொருட்கள், உலோகங்கள், மற்றும் மரபணு மாற்றிய விதைகள் ஆகியவை மூலம் மாசு படிந்துள்ளதா என்பதை கண்டறிவார்.

## *அத்தாட்சி வழங்கும் நிறுவனத்தில் ஆய்வாளர் தன் அறிக்கையை சமர்ப்பிப்பார்*



**ஆய்வாளரின் அறிக்கை ஒரு மதிப்பீட்டாளருக்கு அனுப்பி வைக்கப்படும். அறிக்கையை ஆய்வு செய்தபின் குழுவில் இருந்து விதி மீறல்களுக்கான திருத்தங்கள் செய்யப்பட்டதா என்பதை உறுதி செய்து பின்னர் அத்தாட்சி வழங்கும் குழுவுக்கு அனுப்பி வைப்பார்.**

# அத்தாட்சி வழங்குதல்



பெரிய அளவிலான விதி மீறல்கள் இருந்தால் அதற்கான தண்டனை விவரத்தை குழுவிற்கு அனுப்பிவைக்கப்படும்.( அத்தாட்சி மறுக்கப்படலாம் அல்லது குழுவின் தரத்தை மேம்படுத்த சில நிபந்தனைகள் விதிக்கலாம்).

எல்லாம் சரியாக இருந்தால் நிறுவனம் குழுவிற்கு அத்தாட்சி வழங்கும்.

அத்தாட்சி வழங்கும் நிறுவனம் அப்பிடாவின் டிரேஸ்நெட்டில் தேவையான விபரங்களை பூர்த்தி செய்து scope certificate என்னும் அத்தாட்சி பத்திரத்தை வழங்கும்.

இயற்கை வேளாண்மை பொருட்களை சந்தைப்படுத்தும் குழுவிற்கு இயற்கை வேளாண்மை அத்தாட்சி பத்திரத்தை வழங்குதல்

